RESEARCH ARTICLE

DOI: 10.54392/ijmrd2512

Asian Research Association

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

# Sirpi Balasubramaniam's Folk Creativity in Poetry

K. Radha [a, *]

[a] Department of Tamil, Kongunadu Arts and Science College, Coimbatore -641029, Tamil Nadu, India.

*Corresponding author Email: arjunaakash91501@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd2512

Received: 05-12-2024; Revised: 28-01-2024; Accepted: 07-02-2025; Published: 23-02-2025

**Abstract:** Nature has always been a source of inspiration for literature and adds to its glory. All living things are a re-form of nature. In Tamil, the oldest language that emerged before the formation of stone and soil, there are many poets who have not sung about nature, to the extent that they have been involved in nature, experienced it, and sung poetry. This article seeks to highlight the poet's love for nature, environmental commitment, and the teachings to protect natural resources and save humanity from extinction in the poems of the poet-sculptor in the line of Bharathidasan's poetic lineage.

**Keywords:** Sirpi Balasubramaniam, Folk Creativity, Poet, Poetry

**Language:** Tamil

# சிற்பி பாலசுப்பிரமணியம் கவிதைகளில் கிராமியப் படைப்பாக்கம்

கே. ராதா [அ, *]

[அ] தமிழ்த்துறை, கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-641029, இந்தியா

## முன்னுரை

இலக்கியங்களைப் படைக்க இயற்கை பாடுபொருளாகப் பண்டுதொட்டு அமைந்து பெருமை சேர்க்கின்றது. உயிரினங்கள் அனைத்தும் இயற்கையின் மறுவடிவமாகத் திகழ்கின்றன. கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த மொழியான தமிழ் மொழியில் இயற்கையைப் பாடாத கவிஞர்களே இல்லை என்னும் அளவிற்கு இயற்கை எழிலில் ஈடுபட்டு அதனை அனுபவித்து உணர்ந்து கவிதை பாடியவர்கள் பலர். பாரதிதாசன் கவிதைப் பரம்பரை வரிசையில் கவிஞர் சிற்பியின் கவிதைகளில் இயற்கையின் மீது கவிஞர் கொண்டுள்ள நேசத்தையும் சுற்றுச்சூழல் ஈடுபாட்டையும் இயற்கை வளங்களையும் பாதுகாத்து மனித குலத்தை அழிவிலிருந்து காத்துக் கொள்ளும் வகையில் அறிகூறுந்துதல்களையும் இக்கட்டுரை எடுத்துரைக்க முற்படுகின்றது.

## இலக்கியமும் இயற்கையும்

மனிதனின் ஆற்றலின்றி உருவான இயற்கை மனிதனுக்கு அளவில்லாத இன்பங்களை வழங்குகின்றது அதன் கொடைக் காங்கள் மனிதனுக்கு அளவில்லாத செல்வத்தைத் தந்து வாழவைத்துக் கொண்டிருக்கின்றன. இவ் இயற்கை குறித்து தொல்காப்பியர் கூறும்பொழுது,

“நிலத்துநீர் வளி விசம் போடைந்தும்

கலந்து மயக்கமுலகம்” (Ilampuranar, 1966)

என்கிறார். யாராலும் உருவாக்கப்படாத இயல்பான தன்மைகளைப் பெற்றிருப்பதுடன் புலன்களால் அறியக் கூடியதாகவும் இயற்கை விளங்குகின்றது. மனிதனுடைய ஆன்மாவைத் தன்வயப்படுத்திக் கொள்ள நினைக்கிறது இயற்கை விரிந்து கிடக்கும் பரப்பாலும், ஓங்கி வளரும் உயரத்தாலும் இயற்கையானது மனிதனை உயர்த்த முனைகின்றது. தன் எழிலால் அவனை மகிழ்விக்க முயல்கின்றது. தொலைக்கும் அழிப்பாற்றலால் அவனை அவலத்தில் மூழ்கடிக்கப் பார்க்கின்றது. இவ்வாறான எண்ணற்ற செயல்களின் வாயிலாக இயற்கை மனித இதயத்தை கவர்வதற்கு இடையறாமல் முயன்று கொண்டேயிருக்கிறது என்ற மு.வரதராசனாரின் கூற்று இவண் குறிப்பிடத்தக்கது (Varadharasan, 1962).

## சிற்பியும் கிராமமும்

இயற்கையை நேசிக்கத் தெரிந்தவனால் மட்டுமே இயற்கையின் அன்பையும், அழகையும், நேசத்தையும் புரிந்துகொள்ள முடியும். கவிஞர் சிற்பி இயற்கையைத் தாயாகவும், வீடாகவும், குழந்தையாகவும் நேசிக்கத் தெரிந்தவர். இயற்கையின்றி மனித குலத்திற்கு வாழ்க்கையில்லை என்ற கருத்தை கவிதை வழி வெளிப்படுத்தியவர். நானே இயற்கையாகிப் போதல் என்ற அளவிற்கு இயற்கையுடன் இரண்டறக் கலந்து தன் இயற்கை குறித்த புனைவுகளைப் படைத்துள்ளார். மனிதனின் ஆன்மாவும், இயற்கையின் ஆன்மாவும் சங்கமிக்கும் தருணமே உலகத்தில் மனிதன் அனுபவிக்கும் மகிழ்ச்சிகளிலே உயர்வானது எனலாம். இயற்கையின் தோற்றங்களைக் கண்டு மகிழ்வதும், பரவசப்படுவதும் சிற்பியின் அனுபவங்களாக அவர் கவிதைகளில் வெளிப்படுகின்றன.

காலையிளம் கதிரவனால் கடற்பரப்பிலே, ஒளிப்புனலிலே, சோலையிலே, மலர்களிலே, தளிர்களிலே என எங்கும் இயற்கை எல்லையில்லாத அழகு களஞ்சியமாக இப்பூமியை மாற்றியுள்ளது. காலைப்பொழுது மட்டுமன்றி மயக்கம் ஊட்டதளிர்களிலே என எங்கும் இயற்கை எல்லையில்லாத அழகு களஞ்சியமாக இப்பூமியை மாற்றியுள்ளது.காலைப்பொழுது மட்டுமன்றி மயக்கம் ஊட்டுகிற மாலைப் பொழுதையும் கவிஞர் வாழ்த்துகின்றார்.

“நீலப் பெருவளியின், சௌந்தர்யத் தாரகை

இந்த பூமி எல்லையில்லாத

அழகுக் களஞ்சியம்..... மனோகர மாணிக்க

விடியல்கள், மகரந்த சுந்தர

மலர்க் குளியல்கள், வெது வெதுப்பான

வெயில் மயக்கங்கள், லாகிரி யூட்டும்

இனிய தேன் மாலைகள்” (Bala, 1966)

என்று இயற்கையினால் இப்பூமி அழகுக் களஞ்சியமாகக் காட்சியளிப்பதை உளணர்த்துகின்றார். மேலும்,

“இந்த பூமி

எல்லையில்லாத

அழகுக் களஞ்சியம்” (Bala, 1966)

என்று இயற்கையின் அழகைக் கண்டு வியக்கின்றார். இயற்கை காலந்தோறும் புதிய புதிய தோற்றங்களைத் தன்னுள் கொண்டு விளங்குவதோடு ஏதேனும் ஒரு வகையில் தன் அழகினாலும், சிறப்பினாலும் மனிதனை மகிழ்ச்சிப்படுத்திக் கொண்டேயிருக்கின்றது. இயற்கையின் எழிலும், புதுமையும் எங்கும் தோன்றி அழகிய வண்ணங்களாகக் காட்சியளிக்கின்றன. இதனைக் கவிஞர்,

"புதிதடா இயற்கை வண்ணம்

புதிதடா கணங்கள் தோறும்" (Bala, 1966)

என இயற்கைச் செல்வத்தைப் பாடுகின்றார். இயற்கைப் பொருள்களின் வாழ்நாட்கள் திரும்பிவிடாதோ அழகினைச் என இயற்கையில் வெளிப்படுத்துகின்றார் கவிஞர். சொல்லி,இதனைக் காண்பதற்கு கரைந்து போகும் தன் ஆசையை,

"தவழ்திடும் குழந்தை போலப்

தாய்மடி மீதிலோடித்

பாய்ந்திடும் ஓடை மின்னல்

பனிமலை விண்மீன் எல்லாம்

வாய்ந்திடும் அழகுவைய

வனப்புகள் காணுதற்காக

தேய்ந்திடும் வாழ்நாள் இன்னும்

திரும்பாதோ நூறு நூறாய்" (Bala, 1966)

என்ற வரிகள் மூலம் இயற்கையின் பல்வேறு அழகியல் கூறுகளைக் கவிஞர் வெளிக்காட்டுகின்றார்.

## இயற்கையின் தோற்றும்

இயற்கை எப்போது தோன்றியது எனக் கவிஞர் கேள்விகளை எழுப்புகின்றார். இயற்கை எழில் கொஞ்சி விளங்கும் காடுகளும், கண்ணுக்கு கவினுறக் காட்சி தரும் செடி, கொடிகளும், நிலபுலன்களை வாழ்விக்கச் செய்யும் ஆறுகளும் மீன்கள் துள்ளி விளையாடும் குளங்களும், மனித குலத்தை வாழ்விக்க வந்த பயிர்களும், எல்லா உயிர்களும் தோன்றிய இயற்கை எப்போது உருவானது என இயற்கையின் அழகைக் கண்டு வியக்கின்றார்.

"காடுகள் மலைகள்

செடிகள் கொடிகள்

ஆறுகள் குளங்கள்

பயிர்கள் உயிர்கள்

எல்லாம் சேர்ந்த இயற்கை

எப்போது தோன்றியது" (Sirpi, 2001)

எங்கும் காட்சியளிக்கின்ற இயற்கையின் அழகு அழிவில்லாதது. அழிவில்லாத அந்த இயற்கை அழகே தனக்குப் போதுமானது. அந்த இயற்கையிலே இணைந்திருப்பதே மகிழ்ச்சியானது. பூமியின் இத்தகைய இயற்கை அழகைத் தேடுவதே தன் வாழ்வின் மகிழ்ச்சியான அனுபவம் என்கின்றார்.

"அழகினைத் தேடுவேன்

அழிவில்லாத மெய்

அழகினை ஓடுவேன்

எனது பூமியின் மடியிலே

எங்கும் அழகினைத் தேடினேன்" (Bala, 1966)

என்கிறார். அதிகாலைப் பொழுதில் செங்கதிரோன் தன் கதிர்களை எங்கும் வீசி ஒளி தோன்றச் செய்கிறான். இருள்அகன்று எங்கும் சிறிது சிறிதாக ஒளிதோன்றுகின்றது. சூரியனின் வரவைக் கண்டு ஆலமரக் கிளைகளில் அமர்ந்திருக்கும் பறவையினம் ஆர்ப்பரித்துக் குரலை எழுப்பி மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றது. இயற்கைப் பொருட்களாகிய மரம், செடி, கொடிகளும், பூக்களும், மலர்களும் மகிழ்ச்சிக் கொள்கின்றன. கீழ்த்திசை வானத்தில் தோன்றும் கதிரவனின் வரவைக் கண்டு செங்கமலப் பூக்கள் மகிழ்ச்சி கொள்கின்றன. இதழ் விரித்துச் சிரிக்கிறது. சேவற் கோழிகள் பொழுது விடிந்ததை உலகிற்கு அறிவிக்கின்றன. மண்ணிலெங்கும் மஞ்சள் நிறமான பொன்னைத் தூவுவதைப் போல காலை நேரம் காட்சியளிக்கின்றது. இது புதுமை ஓவியம், மனங்கவரும் அழகிய காவியம் என காலைப் பொழுதை வர்ணிக்கின்றார்.

"செங்கதிர் தன் ஒளி விரிக்குமே கண்டு கண்டு

செங்கமலப்பூச் சிரிக்குமே

மங்கலங்கள் சேவல் கூவுமே மண்ணிலெங்கும்

மஞ்சட் பொன்னைக் காலை தூவுமே" (Bala, 1966)

என மஞ்சள் நிறமாற காலைப் பொழுதை வர்ணிக்கின்றார். மேலும் காலைப்பொழுது அழகிய ஓவியமாகக் காட்சியளிக்கும் நிலையினையும், பறவையினம் பாடும் காட்சியினையும் கவிஞர் படைத்துக் காட்டுகின்றார்.

## கிராமமும் அழகிய காட்சிகளும்

மனிதன் இயற்கையோடு இணைந்திருப்பதற்காகவும் இயற்கையை ரசிப்பதற்காகவும், வெகு தூரம் பயணம் செய்கின்றான். இயற்கை இருக்கும் இடம்தேடி அலைந்து, இயற்கையின் மூலம் கிடைக்கும் பரவசத்தில் மகிழ்ச்சி அடைகின்றான். கவிஞர் சிற்பியும் இயற்கையோடும் இணைந்து களைத்துப் போவதை பெரிதும் விரும்புகின்றார். இயற்கை எந்த விதமான அலங்காரங்களுமின்றி, ஆடைகளுமின்றி அழகாகக் காட்சி தருகின்றது என்கின்றார் கவிஞர். மேலும் வானமும், நதியும், பறவைகளும், விலங்குகளும் இயற்கையோடு இணைந்திருக்கும் போது அழகாககக் காட்சியளிக்கின்றன.

"வானத்தையும்

நதிகளையும் பார்

பறவைகளையும்

விலங்குகளையும் பார்

ஆடை உடுத்தியா

அலங்கரிக்கின்றன:

களங்கமற்ற இயற்கையோடு

கொஞ்ச நேரம்...

இயற்கையில் கரைந்து கலந்து

கொஞ்ச நேரம்" (Sirpi, 2001)

என்று களங்கமற்ற இயற்கையைப் புகழ்கின்றார். பச்சை மலையில் தவழ்ந்து வரும் அருவிகள், அடர்ந்த மரம், செடி, கொடிகள் வளர்வதற்குக் காரணமாக அமைகின்றன. கவிஞர் சிற்பி பல்வேறு அருவிகளைத் தன் கவிதை வழியாக வெளிப்படுத்துகின்றார்.

“பனியுதிர்க்கும் முக்கருவி

பாடிவரும் தமிழருவி

கனியுதிர்க்கும் தேனருவி

கவிதையெனும் மறையருவி” (சிற்பி, 2001)

என அருவியின் பல வகைகளை எடுத்துக் கூறுகின்றார்.

வான், இவ்வுலகம் முழுவதும் பரந்து கிடக்கும் பரப்பாகும். ஐம்பூதங்கள் உருவாவதற்கு வானம் காரணமாக விளங்குகின்றன. இவ்வானில் விளங்கும் காட்சிகளும், மாறுதல்களும் வியப்பூட்டுவன. இவ்வானில் பல்வேறு பொருட்கள் மகிழ்விக்கின்றன. வானில் தோன்றும் நிலவினைக் கவிஞர் வெள்ளிச் சிறகுகள் இன்றிப் பறந்திடும் வெண்புறாவாக உருவகம் செய்கின்றார்.

“வெள்ளிச் சிறகுகள் இன்றி பறந்திடும்

வெண்புறா வோநிலவு” (Sirpi, 2001)

என்று நிலவைப் புறாவாகக் காண்கிறார் கவிஞர்.

## இயற்கையின் மீது நேசம்

பிரபஞ்சத்தின் பிரதிபலிப்பாய் காடுகளும், வளங்களும், மலைகளும் விரிந்து பரந்து கிடக்கின்றன. இயற்கையின் பச்சை, புல்வெளியாய், மரமாய், செடிகளாய், பனித்துளியாய், அருவியாய், வண்டின் ரீங்காரமாய், பறவையாய், விலங்காய் பல்வேறு வகைகளில் பிரதிபலிக்கின்றன. கவிஞர் இயற்கையின் மீது கொண்டுள்ள நேசத்தைத் தன் கவிதை வழி வெளிப்படுத்துகின்றார்.

“வானத்தையும் நதிகளையும் பார்;

பறவைகளையும் விலங்குகளையும் பார்

ஆடை உடத்தியா அலங்கரிக்கின்றன.

களங்கமற்ற இயற்கையோடு கொஞ்ச நேரம்

இயற்கையில் கரைந்து கொஞ்ச நேரம்” (Sirpi, 2001)

பாய்ந்தோடும் ஓடைகளையும், வானில் மின்னும் மின்னலையும், பனிமலைகளையும், விண்மீன்களையும் இயற்கையின் பல்வேறு தோற்றங்களையும் காணும்பொழுதெல்லாம் மனம் மகிழ்வதும், பரவசப்படுவதும் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் காணப்படுவது. கவிஞனும் இயற்கையின் மூலமாகவே தன்னை முழுவதுமாக வெளிப்படுத்திக் கொள்கிறான். அடையாளப் படுத்திக் கொள்கிறான். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் காணப்படுவது. கவிஞனும் இயற்கையின் மூலமாகவே தன்னை முழுவதுமாக வெளிப்படுத்திக் கொள்கிறான். அடையாளப் படுத்திக் கொள்கிறான். கவிஞர் சிற்பியும். இயற்கையின் பல்வேறு அழகினை, இயல்புகளைக் காண்பதற்கு வாழ்நாட்கள் மீண்டும் வராதோ என இயற்கையின் மீது தனக்குள்ள தணியாத ஆசையை வெளிப்படுத்துகின்றார்.

“தாய்மடி மீதிலோடித்

பனிமலை, விண்மீன் எல்லாம்

தவழ்ந்திடும் குழந்தை போலப்

பாய்ந்திடும் ஓடை, மின்னல்

பனிமலை, விண்மீன் எல்லாம்

வாய்ந்திடும் அழகு வைய

வனப்புகள் காணுதற்காய்

தேய்ந்திடும் வாழ்நாள் இன்னும்

திரும்பாதோ நூறு நூறாய்” (Bala, 1966)

என்ற கவிதை வரிகளில் உணர்த்துகின்றார். உயர்வான மலைப்பகுதிகளில் பிறந்து பூமியில் வாழும் உயிரினங்களை எல்லாம் வாழ்வதற்கு வழி செய்தும், நகரங்கள் எல்லாம் அழகுறத் திகழத் துணை செய்யும் பொன்னிநதி அரசுகள் வீழ்ந்த போதும் வீழாது என்றும் நிலைத்து நிற்கும் பெருமையுடைய பைந்தமிழ் போன்றது என்று பொன்னியின் சிறப்பை உணர்த்துகின்றார்.

“உயர்மலை பிறந்து மன்னும்

உயரெனப் பொலிந்து முன்னோர்

அயர்விலா பெற்றி மின்னும்

அழகுமா நகர்கள் சின்னம்

நயனுடைய அரசு வாழ்வு

நலிந்தழிந் தொழிந்த பின்னும்

பயனுடைத் திருவாய் வாழ்வால்

பைந்தமிழ்ப் பொன்னியன்றோ” (Bala, 1966)

என்று பொன்னி நதியின் சிறப்பைப் பாடுகின்றார்.

இயற்கை வளம் சூழ்ந்து நீர் விழும் அருவிகளின் ஓசைகள் கேட்டுக் கொண்டிருக்க குரங்கினமும், மானினமும், மயிலினமும் துள்ளி விளையாடும் அழகிய மலர்ச் சோலைகளைக் கொண்டது மலைச் சாரலாகும் மலைத்துளிகள் சின்னச் சின்னத் தூரலாய் வந்து விழ அம்மழையில் நனைந்தபடியே ஆடிப்பாடும் அழகிய இடம் மலைச்சாரலாகும். இம்மலைச் சாரலின் அழகைக் கவிஞர் விளக்குகின்றார்.

## மனிதனும் காடுகளும்

ஆதி காலத்திலிருந்து இன்று வரை அதிகம் பேசப்படுவதும் தேவைப்படுவதும் இலையகளாகும். ஆதி மனிதன் இலைகளையே ஆடையாக அணிந்தான். இலைகளையே உணவாக உண்டான். இலைகளையும் தளைகளையும் கொண்டே இருப்பிடமாக கூரைகளை முடைந்தான். இவ்வாறு இன்றும் நமக்கு மூன்று வகைகளில் பயன்பட்டு வருவது இலையாகும். எனவே,

“இலைகள்.

அது நம் ஆடை

அது நம் உணவு

அது நம் கூரை” (Sirpi, 2001)

என்று இலையின் பயன்பாட்டினை உணர்த்துகிறார் கவிஞர். இலை உணவாகவும், உடையாகவும், கூரையாகவும் மட்டுமன்றி பயணம் செய்கிற மிதவையாகவும் இலை விளங்கியது. ஆதி காலம் தொட்டு வெள்ளம் ஏற்படும் போது இலைகளையே மிதவையாகக் கொண்டு மனிதர்கள் வாழ்ந்துள்ளார்கள்.

அவ்வகையில் மலையை மிதவையாகக் காண்கிறார் கவிஞர்.

எந்தப் பிரளய வெள்ளத்திலும்

மானுடக் குழந்தைக்கு

அதுதான் மிதவை.... (Sirpi, 2000)

மரம் வளர்ப்போம் மழை பெறுவோம், வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம். ஒரு குடும்பம், ஒரு மரம், மரம் வளர்ப்போம், மாக தடுப்போம் போன்ற பொன்மொழிகள் மரத்தின் சிறப்பை உணர்த்துகின்றன. இம்மரங்களின் சிறப்பைக் கவிஞர் பல்வேறு கவிதைகளின் மூலமாக எடுத்துக் கூறுகின்றார். ஆதிகால மனிதனின் இருப்பிடமாக காடு விளங்கியது. மனிதனுக்குத் தேவையான உணவு, உடை, உறைவிடம் அனைத்தையும் காட்டிலேயே அக்கால மனிதன் பெற்று வாழ்ந்தான். எனவே மனிதனின் தோற்றமே காட்டிலிருந்ததுதான் தொடங்குகின்றது.

“இயற்கை வனைந்த

இந்த காடுதான்

எழில் மிகு மனிதனின்

ஆதிக் கருப்பை” (Bala, 1966)

என ஆதிகால மனிதனின் தோற்றத்திற்குள் காரணமாகக் காடு விளங்கியதைக் கவிஞர் குறிப்பிடுகின்றார். மேலும் குரங்குகளிலிருந்து மனிதன் தோன்றியதும் ஞானத்தைத் தேடி காட்டுக்குள்

“மனிதன் சென்ற நிலையினையும்,

மனித குலத்தின்

ஆரண்ய காண்டத்தில்

விழுதுக் கைகளில் முகவாய் சுமந்த

ஞான விருட்சங்களைத் தேடி

காட்டுக்குள் யாத்ததிரை” (Bala, 1966)

என்று விளக்குகின்றார். தொடக்க காலத்தில் மனிதனின் வாழ்விடமாக விளங்கிய காடு எல்லா விதமான வளங்களையும் தன்னுள் கொண்டு, சூரிய ஒளி காட்டுக்குள் இருட்டை கிழித்துக் கொண்டு ஊடுருவ முடியாத அளவிற்கு பூமியை மறைத்துக் கொண்டு செழிப்பாக வளர்ந்திருந்தது. ஆனால் இன்று இந்நிலையைக் காண முடியவில்லை என வருந்துகின்றார் கவிஞர்.

## இயற்கையைப் பாதுகாப்போம்

இயற்கையைப் பல ஆண்டுகளாகப் பாதுகாக்க மறந்து அதை அழித்து வருகிறான் மனிதன். இயற்கை அழிந்தால் மனித குலம் அழிந்துவிடும். ஆதலால் சுற்றுச்சூழலையும், இயற்கையையும் பாதுகாப்பது ஒவ்வொருவரின் கடமையாகும். இயற்கையை நேசித்துக் காப்பதன் மூலம் மட்டுமே நம் சந்ததிகளை வாழவைக்க முடியும் என்ற கருத்தைக் கவிஞர் கவிதையின் வழியாக ஆழமாக வலியுறுத்துகின்றார்.

“தேசங்கள் தோறும்

ஞானங்கள் தந்தவை மரங்கள்

மரங்கள் அழிந்தால்

மானுடம் அழியும்

உணவும் உடையும்

உறையுளும் அழியும்” (Sirpi, 2001)

என இயற்கை அழிவினால் மனிதனுக்கு ஏற்படும் விளைவுகளைக் கூறி இயற்கையைப் பாதுகாக்க வலியுறுத்துகின்றார்.

## முடிவுரை

கிராமங்களே இந்தியாவின் உயிர்நாடி என்பதை உணர்ந்துகொண்ட கவிஞர் சிற்பி தன்னுடைய கவிதைகளில் கிராமங்களை மிகுதியான அளவில் பாடு பொருளாக்கியுள்ளார். கிராமப்புற மக்களின் வாழ்க்கை என்பது பண்பாட்டு மரபுகளின் பிழிவுகளாகத் துன்பப்படுவதையும், உண்மையான உறவுமுறைகளுக்கு அழுத்தம் கொடுத்து வாழும் உன்னதமும் சிற்பியின் கவிதைகளில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இயற்கைச் செல்வங்களைப் பேணிக் காக்க வேண்டியது ஒவ்வொருவரின் கடமை என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும் என்னும் கருத்து இவ்வாய்வின் வழியாகப் பெறப்படுகின்றது. மனிதகுலத்தின் செம்மாந்த வாழ்வியலுக்கு இயற்கை காலந்தோறும் தன் பங்களிப்பினைச் செய்து வருகின்றது. இயற்கையை நேசிப்பதன் மூலமாக மனித குலத்தைக் காப்பாற்ற முடியும் என்பதைக் கவிதை வரிகளில் உணர்த்துகின்றார். இயற்கையின் இயல்புத் தன்மையானது பல்வேறு வழிகளில் சிதைக்கப் படுவதையும், அழிக்கப்படுவதையும் சிற்பி தன்னுடைய கவிதைகளின் வழியாகக் கண்டிப்பதோடு, இயற்கை அழிந்தால் மானுட வாழ்வு அழிவினைச் சந்திக்கும் என்பதை வலியுறுத்திச் செல்கின்றார். இயற்கையில் மாறுபாடு தோன்றுமேயானால், எதிர்கால உலகம் சூன்யமாக மாறிவிடும் என்பதைக் கவிதைகள் அறிவுறுத்துகின்றன. இன்றைய காலகட்டத்தில் அணு ஆயுதங்களும், அணுக்கதிர் விளைவுகளும் மானுட சமுதாயத்தை அழித்துச் சாம்பலாக்கும் போக்கு மாற வேண்டும் என்பதைக் கவிஞர் பதிவு செய்துள்ளார். பஞ்சபூதங்களைத் தன்னுடைய செயல்பாடுகளினால் சிதைக்கும் மனிதன், அவற்றைப் பேண வேண்டியது அவசியம் என்பதையும், சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குறிதசெய்துள்ளார். பஞ்சபூதங்களைத் தன்னுடைய செயல்பாடுகளினால் சிதைக்கும் மனிதன், அவற்றைப் பேண வேண்டியது அவசியம் என்பதையும், சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்பதையும் கவிஞர் தெளிவாக உணர்த்தியுள்ளார்.

## References

Bala, (1996) Sirpiyin Kavithai Vanam, Manivasagar Pathipagam, Chennai, India

Ilampuranar, (1966) Tholkapiyamum Porulathikaramum, Kalaga Veliyedu, Chennai, India

Sirpi, (2000) Perumoochukalin Pallathaku, Kavitha Publication, Chennai, India

Sirpi, (2001) Poojyangalin Sangili, Kolam Veliyedu, Pollachi, India

Varadharasan, M. (1962) Palantamil Ilakiyathil Iyarkai, Paari Nilayam, Chennai, India

### Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

### About the License

© The Author 2025. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

### Cite this Article

K. Radha, Sirpi Balasubramaniam's Folk Creativity in Poetry, Indian Journal of Multilingual Research and Development, Vol 6, Iss 1, (2025) 9-16. DOI: https://doi.org/10.54392/ijmrd2512